★ பக்கங்கள் 6 விலை சதம் 40

# ஈழநாடு
The EELA NADU

Registered as a Newspaper at the General Post Office Sri Lanka under No' QB/8945/78

மலர்: 21 ஆனி: 28 ஷஃபா: 16 இதழ்: 149
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 12-7-79

## 'வடபகுதியில் அவசரகாலச் சட்டம் அமுல்?

(கொழும்பு)

வடமாகாணத்தில் கடந்த நள்ளிரவு முதல் பொது சன பாதுகாப்புச் சட்டத்தின் 2-வது பிரிவின்கீழ் அவசரகால நிலைமை அமுலுக்கு கொண்டுவருவதென அரசாங்கம் முடிவு செய்திருப்பதாக நம்பகமாக அறியப்படுகிறது.

இச்சட்டப் பிரிவின் பிரகாரம் பொதுகூட்டங்களை, மக்கள் கூட்டமாக கூடி நிற்பது போன்றவை தடை செய்யப்படும்.

இதுபற்றிய அதிகாரப் பூர்வமான கஸட் அறிவித்தல் கடந்த இரவு இச் செய்தி அச்சுக்குப் போகும் வரை கிடைக்கவில்லை, கஸட் அறிவித்தல் எந்நேரமும் வெளியாகலாம் என எதிர் பார்க்கப்பட்டது. [ம]

# தென் இந்து சமுத்திரத்தில் 'ஸ்கைலாப்' வந்து விழுந்தது

## விஞ்ஞானிகளின் இறுதிநேர முயற்சிகள் வெற்றி

ஹூஸ்டன் ஜூலை 11 உலக மக்களை பெரும் பரபரப்பில் ஆழ்த்திய ஸ்கைலாப் என்றழைக்கப்படும் விண்வெளி ஆய்வுகூடம் நேற்று இரவு ஒன்பதரைமணியளவில் இந்துசமுத்திரத்தின் தென்பகுதியில் சிதறி விழுந்தது.

ஆஸ்திரேலியாவின் தென் மேற்குப் பகுதியிலுள்ள சமுத்திரத்தில் இது விழுந்துள்ளதாக விஞ்ஞானிகள் கூறினர். ஸ்கைலாப் நேற்று மண்டலத்துக்குள் புகுந்த சிலநிமிடங்களில் வெடித்து சிதறியதாகவும், சிதறிய பகுதிகள் தென் இந்து சமுத்திரத்தில் விழுந்ததாகவும் அறிவிக்கப்பட்டது.

ஸ்கைலாப் நிலப்பிரதேசத்தில் சிதறி விழுந்திருப்பின் பயங்கர விளைவுகள் ஏற்பட்டிருக்கக் கூடும் என்றும், பொது மக்களுக்கு ஆபத்து ஏற்பட்டிருக்கக்கூடும் என்றும் கருதப்பட்டது, ஆனால் அந்த ஆபத்து யாவும் விஞ்ஞானிகளின் இறுதி முயற்சியால் தவிர்க்

[6ம் பக்கம் பார்க்க]

## லோகசபையில் ஜனதா பெரும்பான்மை இழந்தது

புதுடில்லி, ஜூலை 11 இந்திய ஜனதா அரசாங்கம் லோகசபையில் பெரும்பான்மைப் பலத்தை இழந்துவிட்டது. என்றாலும் சிறிய கட்சிகளின் ஆதரவுடன் கட்சி பதவியில் இருக்கக்கூடுமென்று தெரிகிறது.

ஜனதா கட்சியிலிருந்து 19 உறுப்பினர்கள் நேற்று ராஜினாமா செய்தனர். கடந்த சில தினங்களில் மொத்தம் 46 லோகசபை உறுப்பினர்கள் ஜனதா கட்சியிலிருந்து ராஜினாமா செய்துள்ளனர்.

538 உறுப்பினர்கள் உள்ள லோகசபையில் இப்பொழுது 238 பேரே ஜனதா கட்சியில் இருக்கிறார்கள். இதன் காரணமாக திரு ராஜ்நாராயண் ஆரம்பித்துள்ள கட்சியில் 32 பேர் சேர்ந்துள்ளனர்.

## இந்தியா-இங். 1 வது டெஸ்ட் இன்று ஆரம்பம்

லண்டன், ஜூலை, 11 இந்திய-இங்கிலாந்து முதலாவது கிரிக்கட் டெஸ்ட் நாளை வியாழக்கிழமை லண்டனில் ஆரம்பமாகிறது.

இந்தியக் கோஷ்டிக்கு ஸ்ரீநிவாசன் வெங்கட்ராகவனும் இங்கிலாந்துக் கோஷ்டிக்கு மைக்பிரியர்லியும் தலைமைதாங்குகிறார்கள்.

தமிழாராய்ச்சி மகாநாட்டுக்காக

## மதுரை நகரம் சீரமைக்கப்படும்

### எம். ஜி. ஆர். ஏற்பாடு

சென்னை, ஜூலை 11

1980 ஜனவரி மாதத்தில் மதுரையில் நடைபெறவிருக்கும் தமிழ் ஆராய்ச்சி மாகாநாட்டையொட்டி தமிழ்நாடு அரசு மதுரை நகரை சீர்திருத்தி அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது.

தமிழ்நாடு முதலமைச்சர் திரு எம் ஜி ராமச்சந்திரன் கடந்த திங்கட்கிழமையும் செவ்வாய்க்கிழமையும் மதுரைக்குச் சென்று அதிகாரிகளைச் சந்தித்து நிலைமையை ஆராய்ந்தார்.

தமிழாராய்ச்சி மகாநாட்டின் போது வருகைதரும் மக்களுக்காக மேல்நிலை தண்ணீர் தேக்கங்களும், வசதியான கழிவு இடங்களும் அமைக்கப்படும் என்று திரு. ராமச்சந்திரன் கூறினார். அருகிலுள்ள ஏரிகள் தூர்க்கப்படும் என்றும் குடிசைகள் அகற்றப்பட்டு அம் மக்களுக்காக வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும் என்றும் முதல்வர் கூறினார்.

கலை அம்சம் உள்ள இடங்கள் செப்பனிடப்படும், அவ் விடங்களில் விளக்கப்பலகைகள் வைக்கப்படும் என்றும் எம். ஜி ஆர். சொன்னார்.

## சன்சோனி கமிஷனுக்கு சட்டத்தரணியின் குறிப்பு

[யாழ்ப்பாணம்]

பிரச்னைகளுக்கெல்லாம் உண்மையான தீர்வுகாண்பதற்கு வட்டமேசை மாநாட்டை கூட்டவேண்டிய அவசியத்தை மீண்டும், பணிவுடன் வலியுறுத்தி விண்ணப்பிக்கின்றேன்.

சட்டத்தரணி மணிவாசகம் அண்டலூர், சன்சோனி கமிஷன் உதவிச்செயலாளர் திரு. ஆர். எஸ். சுப்பிரமணியத்திற்கு அனுப்பியுள்ள தந்தியில் தெரிவித்துள்ளார்.

இக்கருத்துக்களை கமிஷன் முன் சமர்ப்பிக்குமாறும் அவர் கேட்டுள்ளார்.

### மஞ்சுசிறி விவகாரம்

அத்தந்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது! யாழ்ப்பாணத்தில் மஞ்சுசிறிக்கு விபத்தினாலேயே காயம் ஏற்பட்டுள்ளதாக, கிடைத்துள்ள சால தகவல்களிலிருந்தும் தெரியவந்துள்ளது. இவ்விபத்துச்சம்பவம் தெற்கிலுள்ள வகுப்புவாதிகளால் பெருப்பிக்கப்பட்டுள்ளது. இச்சம்பவம் பற்றி பூரணவிசாரணை நடப்பதுடன் உண்மை அம்பலப் படுத்துவது அவசியம்.

வன்முறைச் சம்பவங்கள் எதற்கும், தமிழர் விடுதலைக் கூட்டணி காரணமாக இருந்தால் கடும்நடவடிக்கை எடுக்கப்படவேண்டும், கூட்டணி வன்முறை சம்பவங்களுக்கு காரணமாயிருக்காத பட்சத்தில், தமிழருக்கு எதிரான முயற்சிகளை அம்பலப்படுத்த வேண்டும்.

### 30 ஆண்டுகளாக

சுதந்திரம் கிடைத்தநாள் முதல் சுமார் 30 வருடங்களாக

[6ம் பக்கம் பார்க்க]

உ
சிவமயம்

திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் சித்தார்த்தி வருடம் ஆனித்திங்கள் 31ஆம் நாள் (15-7-1979) ஞாயிற்றுக்கிழமை பகல் 11-16 முதல் 12-07 மணிவரையுள்ள கன்னி லக்கின சுபவேளையில்

எமது புத்திரன் திருவளர் செல்வன் மாணிக்க லீலாவிநோதன் அவர்களுக்கும்

எமது புத்திரி திருவளர் செல்வி சிவமலர் அவர்களுக்கும்

மிருசுவில் ''தெற்பேலி''யில் உள்ள மணமகள் இல்லத்தில் நடைபெறவிருக்கும் திருமண வைபவத்திற்கு நண்பர்களையும், உற்றார், உறவினர்களையும்; அன்பர்களையும் குடும்ப சமேதரராய்ச் சமுகந்தந்து மணமக்களை ஆசீர்வதிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மணமகன் இல்லத்தில் பிற்பகல் நடைபெறும் விருந்துபசாரத்திலும் பங்குபற்றும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

திருமதி அன்னம்மா மாணிக்கம்
''மாணிக்கப் பூங்கா'',
மறவன்புலம்,
சாவகச்சேரி.

திரு. திருமதி சி. பொன்னுத்துரை
''தெற்பேலி'',
மிருசுவில்.

3018

விவசாயிகள் மிகவும் ஆவலோடு எதிர்பார்த்திருந்த

டென்மார்க் பீட்ரூட் விதைகள்

சிறிய தொகை இறக்குமதி செய்யப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றோம்!

டென்மார்க் விதை உற்பத்தியாளர்கள், இனிமேல் எதிர்வரும் மார்கழி மாதமே தமக்கு இவ்விதைகள் கிடைக்கும் என்று அறிவித்துள்ளதால், 1980-ம் மார்ச் மாதத்துக்கு முன்னர் இவ்விதைகள் இறக்குமதி செய்ய முடியாது. உங்கள் மாரி போகத்துக்குத் தேவையான விதையான விதைகளையும் இப்பொழுதே பெற்றுக் கொள்ளுங்கள்!

சமுத்திரா ட்ரேட்ஸ் லிமிட்,
23/2 ஸ்டான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 7236

3030

## வரி விளம்பரம்

### பயிற்சி

வெளிநாடுகளில் தொழில்கள் பெறுவதற்கு நவீன முறையில் பயிற்சிகள் வெல்டிங் (Electric Arc & GAS) இலெக்றிக் வயறிங் ரேடியோ (Transistor) Building Technology P. M. G Ceritificate முதலிய பயிற்சிகளுக்கு National Institutes, 57, பாங்சோல் வீதி, யாழ்ப்பாணம். 2990

### தேவை

டச்சின் பிறின்டிங் வேலையில் அனுபவம் வாய்ந்தவர் உடன்தேவை, விண்ணப்பிக்கவும் லக்கி போட்டோ மன்னார். 2992

தையல் வேலை தெரிந்த பெண்கள் தேவை ஞாயிற்றுக்கிழமை 4 மணிக்கு நேரில் வரவும். அப்பர் ரெயிலறிங் மாட் இல. 8, பெரியகடை, யாழ்ப்பாணம். 3025

ஆங்கிலம், தமிழ் ஆகிய இருமொழி தட்டச்சு யந்திரம் (ரைப்றைற்றர்) சகல விபரங்களுடனும் அறியத்தரவும் (மெசின் பெயர் சைஸ், விலை) 108/2 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் 3023

### விற்பனைக்கு

6 ஸ்ரீ 530 இலக்கமுள்ள 150 DL மொடல் லம்பிறட்டா ஸ்கூட்டர் விற்பனைக்குண்டு ஆர். சண்முகபாலன், 114, கேணியடி ஒழுங்கை, கொக்குவில் மேற்கு, கொக்குவில். 3015



கட்டைவேலி–நெல்லியடி ப. நோ. கூ. சங்கம்

## வெற்றிடம்

11-ம் தர சில்லறைப் பண்ட சாலை மேற்பார்வையாளர்

மேற்குறிப்பிட்ட பதவி சம்பந்தமாக இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பம் கோரப்படுகிறது.

வசிப்பிடத் தகைமைகள்: குறைந்தது 2 வருடமாவது அந்த மாவட்ட எல்லைக்குள் வசிப்பவராக இருத்தல் வேண்டும்.

வயது: 23க்கும் — 50க்கும் இடைப்பட்டவராக இருக்க வேண்டும்.

வேதனம்! ரூபா 250 — 390 / 8×10, 10×6

விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதி: பூர்த்தியாக்கப்பட்ட விண்ணப்பங்களை 30-7-79-ந் திகதிக்கு முன் அனுப்புதல் வேண்டும்.

தேவையான தராதரங்கள் மற்றும் தகைமைகள் பற்றிய விளக்கங்கள் யாவையும் பெறுவதற்காக கீழ்க்காணும் விலாசத்திற்கு எழுத்து மூலமோ அன்றேல் நேரடியாக வந்தோ பெற்றுக்கொள்ளலாம். தபால் மூலம் பெறவேண்டின் முத்திரையொட்டப்பட்ட சொந்த முகவரியிடப்பட்ட கடித உறை அனுப்பப்படல் வேண்டும் என்பதைக் கவனத்திற் கொள்ளவும்.

விண்ணப்பப் பத்திரங்களை சங்கத் தலைமைக் காரியாலயத்தில் ரூபா 1-00 செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்

தலைவர்.
கட்டைவேலி — நெல்லியடி ப. நோ. கூ. சங்கம்,
கரவெட்டி,
4-7-79 3017



இளவாலை

## புனித கென்றியரசர் கல்லூரித் தினம்

எதிர்வரும் 14-7-79 சனிக்கிழமை புனித கென்றியரசர் கல்லூரித்தினம் கொண்டாடப்படும். அன்று காலை 7-45 மணியளவில் நடைபெறும் நன்றிப்பலியில் பங்குகொள்ளுமாறு பழைய மாணவர், பெற்றோர், நலன்விரும்பிகள் யாவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர், மாணவர்.
3026



## பிஸ்கால் விற்பனை

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றம்

சண்முகம் பொன்னம்பலம்
மாதாகோவிலடி, களபூமி, காரைநகர்.
வழக்காளி

வழக்கு இல காசு. சு 531
எதிர்
சின்னத்தம்பி முருகேசு
கும்பாலோடை, களபூமி, காரைநகர்.
எதிராளி

மேற்சொல்லப்பட்ட எதிராளியிடமிருந்து வலியாத்தில் விபரிக்கப்பட்ட தொகைப்பணம் ரூபா 5292/-ம் இன்னும் முதல் ரூபா 4300/-க்கு 28-8-78ல் இருந்து தீர்வைத் திகதி வரை 12% வட்டியும் பின் முழுத் தீர்வைத் தொகைக்கும் பணம் இறுக்கும் வரை 5% வட்டியும் (கோட்டுச் செலவு செலவு பின் அறிவிக்கப்படும். மேற்காட்டிய செலவும் பிஸ்கால் செலவும் பவுண்டேச்சும் அறவாக்குவதற்காக கீழே விபரிக்கப்படும் ஆதனத்தின் சகல உரித்துக்களையும் 1979-ம் ஆண்டு ஆவணி மாதம் 27-ந் திகதி வியாழக்கிழமை காலை 10-00 மணிக்கு சொல்லப்பட்ட ஆதனத்தில் இருந்து பகிரங்க ஏலத்தில் யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்ற பிஸ்காலால் விற்கப்படும் என இத்தால் அறிவிக்கப்படுகிறது.

### ஆதன இடாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப்பகுதி காரைதீவு கோவிற்பற்று, காரைதீவு கிழக்கிறை, "கூப்பத்தனை" நி ப 4, 3/4லும் இதற்கு எல்லைகள்;

கிழக்கு வேலுப்பிள்ளை பொன்னம்மாவினதும், வடக்கு சிவசம்பு பெண் பொன்னம்மாவினுதனம், மேற்கு பரமனுதன் பெண் ஈஸ்வரியினுதனம், தெற்கு சுந்தரம்பிள்ளை ஆறுமுகத்திற்கும் பிள்ளையார் கோவில் ஆதனம் இதட்கிலும்.

பிஸ்கால்,
மாவட்ட நீதிமன்றம்,
யாழ்ப்பாணம்,

மாவட்ட நீதிமன்றம்,
யாழ்ப்பாணம்,
06-07-79. 3014


# "தமிழ்த்தாதிகளுக்கு சிங்கள நிபந்தனையிலிருந்து விலக்களிக்குக"

## தாதிகள் சங்கம் கோரிக்கை

[யாழ்ப்பாணம்]

இராமசேவகர்போன்ற அரச ஊழியருக்கு சிங்கள நிபந்தனையில் விதிவிலக்களித்தது போன்று தாதிய உத்தியோகத்தர்களுக்கும் விதிவிலக்களிக்கவேண்டும்.

நிர்வாகத் தொடர்பு குறைந்த தொழில் நுட்ப சார்பானதே தாதித்தொழில். எனவே சிங்கள நிபந்தனையிலிருந்து தாதிகளுக்கு விதிவிலக்களிக்க வேண்டும்.

மேற்கண்டவாறு அரசைக் கோருவதென்று தமிழ்தாதியர் சங்கம் தீர்மானித்துள்ளது.

ஆனைப்பந்தி பெண்கள் பாடசாலையில் நடைபெற்ற முதலாவது வருடாந்தப் பொதுக்கூட்டத்திலேயே இத்தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

சங்கத் தலைவி திருமதி அ. முத்துலிங்கம் தலைமையில் நடைபெற்ற இப்பொதுக்கூட்டத்தில் திரு மார்க்கண்டேயர் வரவேற்புரை நிகழ்த்துகையில், "தமிழ்த் தாதியர்களின் பிரச்சினைகளை தீர்க்க பிரதேச வேறுபாடுகளைக்களைந்து ஒன்றுபட்டு உழைக்கவேண்டும்" என்றார்.

அம்பாறை மாவட்ட வைத்திய அத்தியட்சகர் டாக்டர் பத்மநாதன், திருவாளர்கள் ஆறுமுகம், அ. வடிவேல் உட்படப் பலர் உரையாற்றினர்கள்.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட ஏனைய தீர்மானங்கள் வருமாறு!

பதவியுயர்வில் தமிழ்த் தாதியர்க்கு சமசந்தர்ப்பம் அளிக்கவேண்டும். தமிழ்ப் பகுதியில் நிலவும் தாதிய தட்டுப்பாட்டை நீக்கும் பொருட்டு விகிதாசார அடிப்படையில்மாணவத் தாதியரை தெரிவு செய்யவேண்டும். இப்போது வழங்கப்படும் மேலதிக நேர ஊதியத்தை மற்றைய அரசாங்க உத்தியோகத்தருக்கு வழங்கப்படுவதுபோல் வழங்கப்படவேண்டும் மட்டக்களப்பு தாதியர் பயிற்சிக் கல்லூரிக்கு நிரந்தரக் கட்டிடம் அமைக்கவேண்டும் என அரசைக் கோருவது.

பின்வருவோர் புதுவருட நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்

தலைவர்: திரு நாகலிங்கம் வாகனம், செயலாளர்: திரு அ வடிவேல், பொருளாளர்: செல்வி திரவியம், உபதலைவர்: ஜனாப் எம் எம் மஃறூப், உபசெயலாளர்: திரு தி சதிர்காமதாஸ் 10 பேர் உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர் (கு)

## பத்திரிகை நிருபர்களுக்கு அனுமதி மறுப்பு

[கொழும்பு]

அரச ஊழியரின் சிங்களத் தகைமை பற்றி ஆராய்வதற்கு, நேற்று முன்தினம் காலை பிராந்திய அபிவிருத்தி, இந்து சமய கலாச்சார, தமிழ் மொழி அமுல் அமைச்சர் திரு. செ. இராசதுரை கூட்டிய மாநாட்டில் பத்திரிகையாளர் எவரும் அனுமதிக்கப்படவில்லை

நீண்ட நேரமாக பாராளுமன்றக் கட்டிடத்துக்கு வெளியே கூடியிருந்த பத்திரிகையாளர்கள், கடைசியில் ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றனர். [செ]

## அமெரிக்காவில் 2,05,000 வியட். அகதிகள்

வாஷிங்டன், ஜூலை, 11

வியட்நாமிலிருந்து வெளியேறிய 3 லட்சம் அகதிகளில் 2 லட்சத்து 5 ஆயிரம்பேரை அமெரிக்கா நிரந்தரமாகக் குடியமர்த்தியுள்ளதாக யு எஸ். அதிகாரி ஒருவர் கூறினார்

ஐ நா. மதிப்பீடுகளின்படி மாதம் சுமார் 10,000 அகதிகள் நிரந்தரமாகக் குடியமர்த்தப்படுகின்றனர்; இதில் 7000 பேர் அமெரிக்காவில் குடியமர்த்தப்படுகின்றனர் [இ]

## சைவசமய பாடப் பரீட்சை

[யாழ்ப்பாணம்]

யாழ் சைவபரிபாலனசபை அகில இலங்கை ரீதியில் நடத்தஉள்ள சைவசமயபாடப் பரீட்சைக்கான விண்ணப்பங்களைக் கோரியுள்ளது [இ]


## கேள்வி அறிவித்தல்

பின்வரும் திருத்த வேலைக்குகற்கள் விநியோகிப்பதற்கு கேள்விப்பத்திரங்கள் ரூபா 1,00,000/-க்கு பதிவு செய்துள்ள ஒப்பந்தகாரர்களிடமிருந்து கோரப்படுகின்றன 1979-ம் ஆண்டு யூலை 20 ந் திகதி பிற்பகல் 3.00 மணி வரை கேள்விப்பத்திரங்கள் பிரதான பொறியியலாளர், பெருந்தெருக்கள் திணைக்களம், 761, கடற்கரை வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் பெற்றுக்கொள்ளலாம் கேள்விச்சபை தலைவரினால் 30-07-79-ந் திகதி பிற்பகல் 2-00 மணி வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

பண்ணை தாம்போதியை அகலமாக்குதல்.

மேலும் விபரங்கள் தேவைப்படின் பிரதான பொறியியலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

சி. கணேசரத்தினம்,
பிரதான பொறியியலாளர்
(பெருந்தெருக்கள்)
யாழ்ப்பாணம்.
3016



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

## கேள்வி அறிவித்தல்

கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள சேவைகளுக்குப் பொறியிடப்பட்ட கேள்விகள் இணைப்படியில் இலங்கை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் நிதியாளரினால் 1979-07-30ஆம் தேதி மு. ப 10 மணிவரை பெற்றுக்கொள்ளப்படும்.

அ. சிற்றுண்டிச் சாலை
ஆ. பொது அறை
இ. மலசலகூடம் ஆகியவற்றை இராமநாதன் கலைக்கல்லூரியில் நிர்மாணித்தல்

கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "......பொருட்டுக் கேள்வி' எனக் குறிப்பிடல் வேண்டும்"

1979 யூலை 11 ஆம் தேதி தொடக்கம் 1979 யூலை 27 ஆம் தேதி நண்பகல் 12-00 மணி வரை வழக்கமான வேலை நேரங்களில் கேள்விப் படிவங்களின் தொகுதி இணைப்படியில் இலங்கை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பதிவாளரின் அலுவலகத்தில் வழங்கப்படும். இதற்கு மீளளிக்கப்படுவதாக 100/- ரூபாவும், மீளளிக்கப்படாத வைப்பாக 25/- ரூபாவும் செலுத்தப்படல் வேண்டும்

ஏதாவதொரு அரசாங்கத் திணைக்களம் கூட்டுத்தாபனம் அல்லது வேறு எந்தவொரு பல்கலைக்கழகத்தின் நிருமாண வேலையைச் செய்வதற்காக பதிவுசெய்துள்ள கடந்த மூன்று ஆண்டுகளில் 125,000/- ரூபா செலவுக்குக் குறையாத வேலையைத் திருப்திகரமாக பூர்த்தியாக்கியமைக்கான சான்றை அளிக்கும் ஒப்பந்தகாரர்களுக்குக் கேள்விப்படிவங்கள் வழங்கப்படும்.

வேறு தேவையான விபரங்களை நேரடியாகப் பதிவாளரின் அலுவலகத்தில் வழமையான நேரங்களில் பெற்றுக் கொள்ளமுடியும்.

பதிவாளர்.
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
இலங்கை,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்:
1979-07-10. 3022



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை யாழ்ப்பாணம்

## கேள்வி அறிவித்தல்

பனைமரம் தறித்தலும் பனை மரத்தைப் பிளந்து சீவி கைமரங்கள், சலாகைகள் ஆக்குவதற்கான கேள்வி

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வளவுக்குள் இருக்கும் பனைகளைத் தறித்து கைமரம், சலாகைகள் செய்வதற்கு கேள்விகள் கோரப்படுகின்றன பின்வரும் வேலைகளுக்குரிய வீதத்தை யூலை மாதம் 23ம் தேதி நண்பகல் 12 மணிக்கு முன்பாக பதிவாளருக்கு பதிவுத்தபால் மூலம் அல்லது நேரடியாகச் சமர்ப்பித்தல்வேண்டும்

1 பனை மரம் வேரோடு விழுத்துவதற்குரிய கூலி
2 வைரமான பகுதியைக் கைமரமாக்குவதற்கு ஒரு முழத்திற்கான கூலி வீதம்
3. வைரமான சலாகை ஆக்குவதற்கு ஒரு முழத்திற்கான கூலி வீதம்.

பதிவாளர்.
யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம். 3020



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை யாழ்ப்பாணம்

## கேள்வி அறிவித்தல்

பனை ஓலையை வெட்டி அகற்றுவதற்கான கேள்வி அறிவித்தல்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வளவுக்குள் இருக்கும் பனைகளில் ஓலையைவெட்டி அகற்றுவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன, வெட்டி அகற்றுவதற்கான வீதத்தை ஜூலை மாதம் 23ஆம் திகதி நண்பகல் 12-00 மணிக்கு முன்னர் பதிவாளருக்குப் பதிவுத்தபால் மூலம் அல்லது நேரடியாகச் சமர்ப்பிக்கப்படல்வேண்டும்.

பதிவாளர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம். 3021

“இன ஐக்கியத்துக்கு தீர்வுகாண

# வட்டமேசை மகாநாட்டை உடனடியாகக் கூட்டுக!’

## வடபிரதேச சிறீலங்கா சுதந்திரக்கட்சி கோரிக்கை

### “பிரிவினையைக் கண்டிப்பது பிரச்னையைத் தீர்க்காது”

(யாழ்ப்பாணம்)

“இந்நாட்டின் சகல இன மக்களும் ஐக்கியமாகவும், சமாதானமாகவும் வாழ வேண்டும் என்று ஐக்கிய தேசியக்கட்சி விசுவாசமாக விரும்பினால், வட்டமேசை மாநாட்டை காலம் கடத்தாது உடனடியாக கூட்டுவது தேசிய முக்கியத்துவமும் அவசர அவசியமும் வாய்ந்த ஒன்றாகும்’’

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் வடபிரதேச பிரதிநிதிகள் அவசரக் கூட்டத்தில் மேற்கண்ட தீர்மானம் நிறைவேறியது.

தெல்லிப்பளைசுதந்திரக்கட்சி காரியாலயத்தில் வடபிரதேச அமைப்பாளர் திரு. த. மு. முருகையா தலைமையில் நடந்த மேற்படி கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் தொடர்பாக வெளியிடப்பட்ட அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது:

“1977 தேர்தல் முதல் நமது நாடு முன்னென்றும் கண்டிராத படுமோசமான, அதி பயங்கர நிலையை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது. அரசியல் ரீதியிலும்சரி, பொருளாதார ரீதியிலும் சரி, நாட்டு மக்களின் எதிர்காலம் சூனியமாகவே தென்படுகிறது. இத்தகைய ஓர் இருள் சூழ்ந்த நிலையை உருவாக்கிய ஒரே ஒரு காரணகர்த்தா ஐக்கியதேசியக்கட்சியேஆகும்.

“ஐக்கிய தேசியக்கட்சி பொருளாதார சுபீட்சமும், சுதந்திரமும் பெற்று தருவதாகக் கூறி, சுதந்திர வர்த்தக வலயம் என்ற பெயரில் நாட்டை இன்னுபின்னமாக்கி, அன்னிய முதலாளித்துவ நாடுகளுக்கு அடகு வைத்தது மட்டுமின்றி, அதன் சமீபத்தைய நடவடிக்கைகள் மூலம் உள் நாட்டில் மீண்டும் ஒரு இனக்கலவரத்துக்கு தூபம் போட்டு வருகின்றது குறிப்பாக சமீபத்தில் பாராளுமன்றில் அநுராதபுர மாவட்டத்தைச் சேர்ந்த மூன்று உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளை வவனியா மாவட்டத்துடன் இணைப்பது என்று எடுத்த தீர்மானத்தின் மூலம் சிங்கள, தமிழ் மக்கள் மத்தியில் புதிய நெருக்கடி ஒன்றை உருவாக்கியுள்ளது. இதையொட்டி சிறி லங்கா சுதந்திரக்கட்சி பாராளுமன்றக்குழு நாடாளுமன்றத்தில் நடந்துகொண்ட முறையை நாம் வரவேற்கும் அதே வேளையில் ஐக்கியதேசியக்கட்சியின் தீர்மானத்தையும் நடவடிக்கைகளையும் மிக வன்மையாகக் கண்டிக்கிறோம்.

“1977 தேர்தல் விஞ்ஞாபனத்தில் ஐக்கியதேசியகட்சி இந்நாட்டில் தேசிய இனப் பிரச்னையை முற்றுமுழுதாக தீர்ப்பதற்கு சகல கட்சிகளின் வட்டமேசை மகாநாடு ஒன்றைக் கூட்டுவதாகக் கூறி தேசிய ரீதியில் அதற்கான அங்கீகாரத்தையும் பெற்றுக் கொண்டது. கடந்த இரண்டு ஆண்டு காலமாக அவ்வட்ட மேசை மாநாட்டை அது கூட்டத்தவறியது மட்டுமல்ல, அதை கூட்டாததற்கு பல் வேறு நொண்டிச்சாட்டுகளையும் கூறிவருகிறது.

அங்கீகரிக்கப்பட்ட பல கட்சிகள் தோல்வியடைந்ததும், புதிய அரசியல் சாசன தெரிவுக் குழுவில் தமிழர் விடுதலைக் கூட்டணி பங்கு பற்றத் தவறியதும், மேற்படி வட்ட மேசை மகாநாட்டை கூட்ட முடியாத நிலையை ஏற்படுத்தியுள்ளது என்று ஜனாதிபதி, பிரதமர் ஆகியோர் கூறுவது சிரிப்பிற்கிடமானது 1977 தேர்தலில் தோல்வியுற்ற ஒரே காரணத்தினால் அக்கட்சிகள் அழிந்து ஒழிந்துவிடவில்லை என்பது சமீபத்தில் நடந்தேறிய மாநகரசபை, நகர சபைத் தேர்தல்களில் நிரூபிக்கப்பட்டுவிட்டதை யாரும் மறுப்பதற்கில்லை. அன்றியும் தேர்வுக்குழுவில் தமிழர் விடுதலைக்கூட்டணி பங்கு பற்றவில்லை என்ற காரணத்தைக் காட்டி வட்டமேசை மாநாட்டில் அது பங்குபற்றமாட்டாது என்று கூறுவது கற்பனை மட்டுமல்ல குதர்க்கமானதும் ஆகும்.

“வெளிநாட்டு நிருபர்கள் மத்தியில் உரையாற்றிய போது சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்கா ஐக்கிய தேசியக்கட்சிக்கு வாக்குறுதியளித்தபடி அவ்வட்டமேசை மகாநாட்டை கூட்டுமாறு விடுத்த கோரிக்கையை நாம் மனதார வரவேற்கின்றோம். அதே வேளையில் சிறிலங்கா சுதந்திரக்கட்சி பாராளுமன்றத்தின் உள்ளும் புறமும் இம்மகாநாட்டை உடனடியாகக் கூட்டுமாறு ஐக்கிய தேசியக்கட்சியை வற்புறுத்த வேண்டுமென்று நாம் கேட்டுக்கொள்கிறோம்.

“பிரிவினைக் கோரிக்கையை கண்டிப்பதும், பிரிவினை கோரும் இயக்கங்களை தடை செய்வதும் பிரச்னைக்குத் தீர்வு காணும் வழியல்ல என்பதையும் இங்கு சுட்டிக் காட்டுகிறோம் இந்நாட்டு மக்கள் அனைவரினதும் அபிலாஷைகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சகல கட்சிகளையும் அழைத்து பேச்சுவார்த்தைகள் மூலம் இந்நாட்டு தேசிய இனப் பிரச்னைக்கு சமூகமான ஒரு தீர்வு காண வழி பிறக்கும் என்றும் நாம் கருதுகிறோம்.

“கடந்த காலங்களில் தேசிய இனப்பிரச்னைக்குத் தீர்வுகாண பேச்சு வார்த்தைகள் மூலம் பல ஒப்பந்தங்கள் கைச்சாத்தாகியுள்ளன. அவற்றில் பண்டா-செல்வா ஒப்பந்தமும், டட்லி-செல்வா உடன்படிக்கையும், குறிப்பிடத்தக்கவை. வடக்கு, கிழக்கு மாகாணங்கள் இரண்டும், தமிழ் மக்களின் பாரம் பரிய பிரதேசங்கள் என்பதை இவ்விரு ஒப்பந்தங்களும்கூட ஏற்று உறுதிப்படுத்தியுள்ளன. நிலைமை இவ்வாறிருக்க, ஐக்கிய தேசியக் கட்சி வவனியா, அநுராதபுர மாவட்ட எல்லைகளை மாற்றப் போவதாக எடுத்த தீர்மானம் ஐக்கிய தேசியக்கட்சியின் முன்னைய நிலைப்பாட்டுக்கும், அதன் தலைவர்களின் கண்ணியமான முடிவுகளுக்கும் விரோதமானது மட்டுமல்ல, தேசத்துரோக நடவடிக்கையுமாகும், என்று நாம் அபிப்பிராயப்படுகிறோம்’’.

“இவ்வறிக்கையின் பிரதிகள் ஜனாதிபதி திரு. ஜே ஆர். ஜயவர்த்தனவுக்கும் சிறிலங்கா சுதந்திரக்கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

---

## மக்கள் கருத்து

### தமிழ் உணர்வு மிளிரட்டும்

அண்மையில் தீவுப்பகுதியைச் சேர்ந்த அல்லைப்பிட்டியில் ஒரு கோவில் திருவிழாவை முன்னிட்டு ஒரு நாடகவிழா நடைபெற்றது. இவ்விழாவில் நான்கு நாடகங்கள் மேடையேற்றப்பட்டன. இதில்இரு நாடகங்கள் சமூகத் தொடர்புடையனதாகவும், இரு நாடகங்கள் முழுக்க முழுக்கத் தமிழ் மணம் கமழ்வதாகவும் இருந்தன. ஒன்று-கைலாய வன்னியன் சரித்திரப்புகழ் நாடகம் இது சிறுவர்களாலேயே அபாரமாக நடித்துக் காண்பிக்கப்பட்ட. அதி சிறந்த, பாராட்டக்கூடிய நல்ல நாடகம் மற்றது-முழுங்கும் முத்துக்கள்! நல்ல தமிழ்ச் சொற்கள்! காவேரியாகப் பாய்ந்தோடிற்று. அதிலும் தனித்து ஒருவர், உணர்ச்சியை எவ்விதமாக பிரதிபலிக்க முடியும் என்பதை ரசிகர்களுக்கு எடுத்துக் காட்டிக் கொண்டே இருந்தார். அவரது அபார நடிப்பு பாராட்டத்தக்கது. இந்த விமர்சனத்தை நான் ஏன் இங்கு குறிப்பிடுகின்றேன் என்றால்! இப்பொழுது நாடகம் என்ற பெயரிலே நடைபெறும் காதல் களியாட்டம்; ஆட்டம், ஓட்டம் என்ற போலிச் சம்பிரதாயங்களை கைவிட்டு நல்ல தமிழ்க்கனிகள் குலுங்கும் நாடகங்களையோ, அல்லது வேறு நிகழ்ச்சிகளையோ தமிழ்க்கலை கலாச்சாரத்தோடு - தமிழ் உணர்வோடு செய்தால் நமது மொழி வாழும், வளரும்; வையகத்தே புகழ் ஓங்கும்!

எஸ். வில்பிரட்சிங்

யாழ்ப்பாணம்.

---

இதனை நீங்கள் வாசிக்கத் தொடங்கும்போது, ‘ஸ்கைலாப்’ பூமியில் விழுந்திருக்கலாம்; அல்லது பூமியை நோக்கி நெருங்கிக் கொண்டிருக்கலாம். நிலைமை எப்படியானாலும்; இச் சித்திரம் நமது அலுவலக நிருபரின் கற்பனையில் உதித்தது! தப்பித்தவறி ஸ்கைலாப் விழுந்துவிட்டாலோ அல்லது இன்னும விழவில்லையோ... நீங்கள் சற்றுப் பயம் நீங்க, இதனைப் படித்து விழுந்து விழுந்து சிரிக்கலாம்!

# யாழ். மக்களை ‘ஸ்கைலாப்’ ஏற்படுத்திய பீதி!

“இன்னும் 24 மணி நேரத்தில் ஸ்கைலாப்பின் ஒரு பகுதி, யாழ்ப்பாண மாவட்டத்திற்குள் விழும் என்று சற்றுமுன் விஞ்ஞானிகள் அறிவித்துள்ளனர். ஆதலால் அப் பகுதியில் வாழும் மக்கள், யாழ் மாவட்டத்தைவிட்டு வெளியேறி வவனியா மாவட்டத்திற்கு செல்லத் தயாராகுங்கள். அடுத்த முக்கிய அறிவித்தல் ஒரு மணிநேரத்தில் கேட்கலாம்...’’

வானொலி அறிவிப்பைக் கேட்டதும், யாழ்ப்பாண பட்டினம் அல்லோலகல்லோலப்பட்டது. பொலிஸ் வயர்லஸ் கார்கள் இங்குமங்குமாக பறந்தன. பஸ்கள் யாவும் பஸ்நிலையத்தை முற்றுகையிட்டன. மக்களுக்கு நின்று பேசக்கூடநேரமில்லை. ஒரே அவசரம்...

நவீன மார்க்கட்டிலுள்ள ஜவுளிக் கடைகளின் முன்னால், லொறிகள். ட்ராக்டர்கள் வந்து நின்றன. ஜவுளிகள் முதல் அல்மேரா வரை சகல சாமான்களும் ஏற்றப்படுகின்றன. நகைக்கடைகள் முன் கார்கள்... அவற்றில் நகைகள் ஏற்றப்படுகின்றன.

வவனியாவிற்கு லொறி வாடகை என்ன தெரியுமா? 2000 ரூபா. அது கூட பிடிப்பது கஷ்டம். பஸ்நிலையக் கடைகளில் மக்கள் தாங்களாகவே, காலிசெய்ய ஆரம்பித்துவிட்டனர். கடைக்காரர்கள் தங்கள் குடும்பத்தை காப்பாற்ற சென்றுவிட்டனர்.

வானொலியில் அடுத்த முக்கிய அறிவித்தலை எதிர்பார்த்து மக்கள் காத்திருக்கின்றனர். இன்னும் 20 நிமிடம் இருக்கின்றது.

இதற்கிடையில் பொலிசார் ஜீப்பில் ஒலிபெருக்கி மூலம் மக்கள் எவரும் கலவரப்படவேண்டாம். பாதுகாப்பு நடவடிக்கை எடுக்கப் பட்டுவருகிறது என்று அறிவித்தபடியிருந்தார்கள்.

சர்க்கஸ் பார்க்க வந்த சனக்கூட்டம் காணப்பாய்ச்சலில், அங்குமிங்குமாக அலைந்து கொண்டிருக்கின்றது.

வானொலி அறிவித்தல் வந்ததுமே, பாடசாலைகள் யாவும் விடுமுறைவிடப்பட்டது. அவசரமவசரமாகப் பாடசாலை பஸ்கள் புறப்படுகின்றன. இராணுவ டிரக்குகளும், கடற்படையினரும் தேவையான நடவடிக்கைகளை எடுக்கின்றனர்.

வானொலியில் அடுத்த அறிவிப்பு...

நிலைமை பற்றி உயர் மட்ட மாநாட்டில் பல முடிவுகள் எடுக்கப்பட்டன, உடனடியாக தென்னிலங்கையில் இருந்து 5000 பஸ்களும் 3000 லொறிகளும் யாழ்ப்பாணத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது யாழ் ஆஸ்பத்திரி நோயாளிகள் பஸ்கள் மூலமும் சிறைக்கைதிகள் லொறிகள் மூலம் வவனியா செல்ல வேண்டும். பெண்கள் குழந்தைகளுக்கும் பஸ் வசதியுண்டு. இளைஞர்கள் ஆண்கள் கூடுமானவரை நடந்து செல்லவேண்டும் என முடிவாகியுள்ளது. இன்னும் 20 மணிநேரத்துக்குள் யாவரும் வவனியா சென்றுவிடவேண்டும். வவனியாவில் ஆயிரம் முகாம்களை இராணுவத்தினர் அமைத்து வருகின்றனர். மக்கள் பஸ்நிலையம் ரயில் நிலையம், பாடசாலைகளில் கூடி நின்று பயணத்தை மேற்கொள்ளவும்...

வானொலி அறிவித்தலை கேட்டதும் சகல மக்களும் சுறுசுறுப்பாக இயங்கத் தொடங்கினர்.

என் குடும்பத்தினர் ஏற்கனவே அநுராதபுரத்திற்கு, என் அண்ணர் வீட்டு வைபவம் ஒன்றுக்கு சென்றிருந்ததால் எனக்கு அந்தக் கவலையில்லை.

எப்படியாவது பஸ்ஸில் ஏறிவிடவேண்டும் என்ற அவா். பக்கத்தில் கந்தையா மாஸ்டர் குடும்பத்துடன் நின்று கொண்டிருந்தார். அவர் மாஸ்டர் வேலை எடுத்து இன்று 25 வருடமாகிறது. ஒருநாள் கூட யாழ் மாவட்டத்திற்கு வெளியில் போனதில்லை. இடமாற்றம்வரும் ஒவ்வொரு முறையும் எம்.பியைப் பிடித்து ரத்து செய்துவிடுவார் அப்படிப்பட்ட கந்தையா மாஸ்டர் இன்று குடும்பத்துடன் பஸ்ஸில் முதல் ஆசனம் பிடிக்க காத்திருப்பது எனக்கு ஆச்சரியமாய் இருந்தது.

---

**கா. யோகநாதன்**

---

கிட்டச் சென்று பேச்சைக் கொடுத்தேன் கையில் பெரிய வெட்டுக் கத்தி வைத்திருந்தார்.

‘என்ன மாஸ்டர் கத்தியோடே?’ என்றேன்.

‘இல்லை தம்பி போனகையோடை வவனியாவில் நல்ல இடமாய்ப் பார்த்து காடு வெட்டத்தான் என்றார்.

பஸ் வந்து நின்றது ஒருமாதிரி ஏறிக்கொண்டேன். என்னிடம் சாமான்கள் எதுவும் இல்லை. அதனால் முதலில் ஏறமுடிந்தது.

பின் ஆசனத்தில் அமர்ந்து கொண்டேன். யாழ் பஸ் நிலையத்தில் காத்திருந்த ஒரு பகுதியினர் ஏறிவிட்டனர். பஸ் புறப்பட்டது; வீதியெல்லாம் சனக்கூட்டம் எனக்கருகில் ஒரு குடுகுடு கிழவர் வயது என்பதை தாண்டியிருக்கும் கண் பார்வை குறைவு. கண்ணாடி போட்டிருந்தார் அவர் அடிக்கடி வானத்தை எட்டிப் பார்த்துக் கொண்டுவந்தார்.

என்னப்பு பார்க்கிறீர்கள்? என்றேன்.

‘அதுதான்மோனை அந்த கைலப்பை’ என்றார்.

எண்பதுவருடம் வாழ்ந்தும் இன்னும் உலகப் பற்று விடவில்லை, சாவதற்கும் பயப்படுகிறார்.

எனக்கு மறுபக்கத்தில் ஒருவர் தொங்கிய முகத்துடன் இருந்தார் எங்கேயோ பார்த்த முகம்...... ஆமாம்...நீதிமன்றத்திலே, கள்ள மாடு பிடித்த வழக்கொன்றில் மாட்டுப்பட்டவர்...எல்லையும் அவருக்குத் தெரியும்

“என்ன கவலையோடு இருக்கிறீர்கள்’’ என்றேன்.

“பார் தம்பி எத்தனையோ ஆடு மாடுகளையெல்லாம் விட்டுவிட்டு, எல்லாரும் வவனியா போறாங்கள்’’ என்றார்.

வீதி, வீடுகள் எல்லாம், ஆடு மாடுகள்... அவர் கவலைக்கும் காரணம் இருந்தது. கள்ள மாடு பிடித்து விற்பது அவர் தொழில். இப்ப நல்ல மாடுகளையே விற்க முடியாத நிலை...

பஸ் போய்க்கொண்டிருக்கிறது. வழியில் இரண்டு மூன்று இடத்தில் இளைஞர்கள் சர்க்கரைத் தண்ணீர்ப்பந்தல் போட்டிருந்தார்கள். இளநீரும் கொடுத்தார்கள்.

சாவகச்சேரியை அடைந்ததும் சற்று ஓய்வு எடுத்தோம். பஸ் நிலையத்தில் பெண்கள், குழந்தைகள் காத்திருந்தனர் இன்னும் தென்னிலங்கையிலிருந்து பஸ்களும், லொறிகளும் வந்துசேரவில்லை. 5 மணி நேரத்தில் அவைகளும் வந்துவிடும்.

வவனியாவுக்கு பாதயாத்திரையொன்றை சாவகச்சேரி இளைஞர்கள் ஒழுங்கு செய்திருந்தனர் கடந்த மாதம் வேக நடைப்போட்டியில் உலக சாதனை நிலைநாட்ட முயற்சித்த இளைஞர் தலைமையில் 2000 இளைஞர்கள் அங்கிருந்து வவனியா புறப்பட்டார்கள்,

[4ம் பக்கம் பார்க்க]

**34 எம். பிக்கள் ராஜினமா**

**நம்பிக்கையில்லா பிரேரணை**

# இந்திய ஜனதா ஆட்சி வீழ்ச்சியுறும் ஆபத்து!

## ராஜ்நாராயண் தலைமையில் புதிய எதிர்க்கட்சி

புதுடில்லி, ஜுலை. 11 இந்திய ஆளும் ஜனதாகட்சிக்குள் எழுந்துள்ள நெருக்கடியை அடுத்து ஜனதா அரசு வீழ்ச்சி அடையும் ஆபத்து ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த இரண்டு நாட்களுக்குள் ஜனதாகட்சியிலிருந்து 34 லோகசபை உறுப்பினர்கள் ராஜினமாச்செய்துள்ளனர்.

### புதிய எதிர்க்கட்சி

ராஜினமாச் செய்த 34 பேரும் முன்னள் சுகாதார அமைச்சர் திரு. ராஜ்நாராயண் தலைமையில் இந்திய பாராளுமன்றத்தில் புதிய எதிர்க்கட்சி ஒன்றை ஆரம்பித்துள்ளனர்.

ஜனதாகட்சியிலிருந்து ராஜினமாச் செய்த எம். பி.க்கள் சிலர் தமது ராஜினமாவை மறுபரிசீலனை செய்யயோசித்திருப்பதாக ஜனதாகட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

பொலிசாருக்கும் இராணுவத்தினருக்கும் இடையே அண்மையில் ஏற்பட்ட கலவரம் தொடர்பாக அரசு நடந்து கொண்டமுறையை ஆட்சேபித்தே இந்த எம். பி.க்கள் கட்சியிலிருந்து ராஜினமாச் செய்திருந்தனர்.

### சந்திரசேகர் கருத்து

ஜனதாகட்சி எம். பி.க்களின் ராஜினமா துரதிர்ஷ்ட வசமானது என்று ஜனதாகட்சித் தலைவர் திரு சந்திரசேகர் கருத்துத் தெரிவித்துள்ளார்.

### அட்வாணி கருத்து

எம். பிக்களின் ராஜினமாவினுல் அரசுக்கு எதுவித அச்சுறுத்தலும் இல்லை என்று தகவல் ஒலிபரப்பு அமைச்சர் திரு. எல். கே. அட்வாணி தெரிவித்துள்ளார்.

### நம்பிக்கையில்லா பிரேரணை

இதேவேளையில், காங்கிரஸ் கட்சியினுல் அரசுக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான விவாதம் லோகசபையில் நடைபெற்றுவருகிறது [இ]

## 'ஸ்கைலாப்' கடலில் விழும் வாய்ப்பே அதிகம்?

வாஷிங்டன், ஜுலை 11 பூமியை நோக்கிக் கீழேவந்து கொண்டிருக்கும் அமெரிக்க விண்வெளி ஆய்வு கூடமான ஸ்கைலாப்பின் துண்டுகள் நிலத்தில் விழக்கூடிய வாய்ப்புகள் கால் பங்கு உண்டு! எனினும் அத்துண்டுகளால் தனிநபர் யாரும் காயப்படக்கூடிய வாய்ப்பு அற்பசொற்பமே என்று அமெரிக்க விண்வெளி நிலையமான நாஸா மதிப்பிடுகிறது.

ஸ்கைலாப் சுற்றும் பாதையின் கீழ்வரும் பூமி-இது பூமத்திய ரேகைக்கு 50 பாகை வடக்கு முதல் 50 பாகை தெற்கு வரையில் இருக்கும் - ஏறத்தாள முக்கால் பங்கு கடலாகும் ஆகவே, துண்டு கடலில் விழவே கூடுதல் வாய்ப்பு உள்ளது எனவே, தனி நபர் ஒருவர் காயமடையும் சாத்தியக்கூறு, 60,000 கோடியில ஒரு பங்குதான் என நாஸா மதிப்பிடுகிறது. ஸ்கைலாப் சுற்றும் இறுதி விண் வீதியின் கீழ் உலக மக்கள்தொகையில் மிகப் பெரும்பாலோர் வரமாட்டார்கள்.

### மறைந்திருப்பது ஆபத்தானது

ஸ்கைலாப் கலத்தின் நொறுங்கிய துண்டுகளில் ஏதேனும் ஒரு நிலத்தில் விழ நேரிடுமானுல் வெளியிலிருப்பதைவிடக் கட்டடங்களின் உள்ளேயிருப்பது சற்றே பத்திரமானதாக இருக்கலாமென நாஸா கூறுகிறது. எனினும், ஏதேனும் ஒரு காரணத்திற்காக ஆட்களின் வெளியில் அல்லது வாகனங்களில் இருக்கவேண்டி வருமானுல், அவர்கள் தம் திட்டங்களை மாற்றவேண்டிய அவசியமென நினைக்க வேண்டாம் என நாஸாயோசனை கூறுகிறது. பாதுகாப்பாக மறைத்திருக்க மேற்கொள்ளும் செயல்கள், ஸ்கைலாப் துண்டுகளினுல காயமேற்படக்கூடிய வாய்ப்பினைக் காட்டிலும் அதிக ஊறு செய்வதாக இருக்கக்கூடும்.

## இரு வருடமாக 'தோண்டப்படும்' பொதுக் கிணறு!

[புலோலி]

புலோலி தெற்கு கப்பாவத்தைக் குடியேற்றத்திட்டத்தில் இரண்டு வருடங்களுக்கு முன்னர் தோண்ட ஆரம்பிக்கப்பட்ட பொதுக்கிணறு இன்று வரையும் ஆரம்பிக்கப்பட்ட நிலையிலேயே ஸ்தம்பித்திருப்பதாக பருத்தித்துறை எம். பி திரு. கே துரைரத்தினம் யாழ். அரசாங்க அதிபருக்கு அவசரத் தந்திமூலம் அறிவித்துள்ளார்.

அவர் தனது அவசரத் தந்தியில், பிரஸ்தாப பொதுக் கிணறு தொடர்ந்து தோண்டப்படுவதில் ஏதாவது பிரச்னைகள் இருப்பின், புதிதாக வேறொரு கிணற்றைத் தோண்டி கப்பாவத்தை குடியேற்றவாசிகளின் குடிநீர்த் தட்டுப்பாட்டைப் போக்குவதற்கு நிதி ஒதுக்கித்தரும்படி கோரியுள்ளார்.

## இராணுவ அதிகாரிகள் வெளியேறத்தடை!

மனகுவா, ஜுலை. 11 நிக்கராகுவாவிலிருந்து இராணுவ அதிகாரிகள் வெளியேறுவதற்கு அரசு தடைவிதித்துள்ளது.

கொரில்லாப் படைகள் அரசு படைகளை எதிர்த்து வேகமாக முன்னேறிவருவதை அடுத்தே ஜனுதிபதி திரு. சோமோஸா மேற்கண்ட உத்தரவை விடுத்துள்ளார்

இராணுவ அதிகாரிகள் நாட்டைவிட்டு வெளியேருதவாறு கண்காணிக்குமாறு விமான நிலையங்களுக்கு ஜனுதிபதி உத்தரவிட்டுள்ளார்.

'சந்தினிஸ்ட்' கொரில்லாப் படைகள் 26 நகரங்களும் பட்டினங்களும் அடங்கிய 6 மாகாணங்களைக் கைப்பற்றிய பின்னர் இறுதித்தாக்குதலுக்கு தம்மைத் தயார் நிலையில் வைத்துள்ளன என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. [இ]

## யாழ். மக்களை..

[3-ம் பக்கத் தொடர்ச்சி]

10 மணி நேரத்திற்குள் சென்றுவிடுவதென்பது அவர்களது திட்டம் வீதியால் ஒரு கரையால் ஒருவர்பின் ஒருவராகச் சென்றுகொண்டிருந்தனர். வழியிலும் இளைஞர்கள் சேர்ந்துகொண்டனர்.

எங்கள் பஸ் புறப்பட்டது சங்கத்தானை, மீசாலை எங்கும் மக்கள் கூட்டமாகவே இருந்தது.

கொடிகாமம் சந்தியை அடைய முடியவில்லை. பருத்தித்துறை வீதியிலிருந்து 1500 மாட்டு வண்டிகள் வவனியா சென்றுகொண்டிருந்தன யாழ்ப்பாணத்தில் இத்தனை வண்டிகளா? பார்ப்பதற்கு அழகாயிருந்தது. ஒவ்வொரு வண்டிலிலும் பெண்கள், குழந்தைகள் சட்டி பானைகள் மற்றும் பொருட்கள்.

அப்போது ஒலிபெருக்கி கார் ஒன்று எங்கள் பஸ்ஸை முந்தியடித்துச் சென்றுகொண்டிருந்தது. எல்லாரும் எட்டிப் பார்த்தோம். சைக்கிள் ஓட்டத்தில் உலகசாதனையை முறியடித்த இளைஞர் தலைமையில் பத்தாயிரம் இளைஞர்கள் சைக்கிள்களில் வந்துகொண்டிருக்கிருர்கள்... இப்படி ஒலிபெருக்கி அலறியது திரும்பப்பார்த்தேன். கண்ணுக்கு எட்டிய தூரம்வரை ரே சைக்கிள் பார், கரியல் எல்லாவற்றிலும் இளைஞர்கள்... பஸ்ஸை முந்திச் சென்ருர்கள்.

அன்று கொழும்பிலிருந்து 3 கடுகதி ரயில்கள யாழ்ப்பாணத்திற்கு அனுப்பப்பட்டிருந்தன. அதில் ஒன்று எழுதுமட்டுவாளில் எங்களைத் தாண்டிச் சென்றுகொண்டிருந்தது, ஒரே சனத்திரள...

பளை பஸ் நிலையத்தை அடைந்தோம்... தேநீர்க் கடையில் முதலாளியுமில்லை... ரீமேக்கருமில்லை... கடைகள திறந்தபடியே இருந்தன.

ஆறு வருடமாக அடாத்தாகக் காணியில் எழும்பமாட்டேன் என்று இருந்துவந்தவர்; மாவட்ட நீதிமன்றத் தீர்ப்பையும் எதிர்த்து அப்பீல் செய்த ஒருவர், பெட்டி, படுக்கை, சட்டி, பானையுடன் குடும்பம் சகிதமாக, பஸ்ஸில் ஏறிக்கொண்டார்.

அவர், காணியில் அடாத்தாகக் குடியேறியது; பின் நீதிமன்றத் தீர்ப்பை எதிர்த்து அப்பீல் செய்தது எல்லாவற்றையும் தொடர்கதைபோல், பஸ்ஸில் சொல்லிக்கொண்டு வந்தார்... அடேயப்பா... இந்த ஸ்கைலாப்பிற்கு இத்தனை சக்தியுண்டா?

கொழும்பிலிருந்து வந்த லொறிகளும் பஸ்களும், கிளிநொச்சியில் எங்களை விலத்திச் சென்றுகொண்டிருந்தன...

கிளிநொச்சியிலும் சிலர் ஏறிக்கொண்டனர். வாடகை வீட்டில் குடியிருந்த ஒருவர், பிடிவாதமாக எழும்பமாட்டேன் என்று வாடகை சபையில் வாதாடியவர் ஒரு பேச்சு மூச்சின்றி உடுத்த உடையுடன் பஸ்ஸில் ஏறிக்கொண்டார்.

கிளிநொச்சியைத் தாண்டியதும் பஸ்ஸில் அப்பாடா என்று பெருமூச்சுவிட்டார்கள. யாழ். மாவட்டம் கழிந்துவிட்டது.

வவனியாவில் பாடசாலை முகாமொன்றை அடைந்தோம். மாலை நெருங்கிக்கொண்டுவந்தது. எல்லாரும் இறங்கிச் சென்ரும். அங்கு தொண்டர்கள வரவேற்று உணவு தந்தார்கள். அதில் ஒருவர் கவலையோடு இருந்தார்;

என்ன வவனியாவிலிருக்கும் நீங்களே கவலைப்படுகிறீர்களே! என்றேன்,

'இல்லைத்தம்பி என்னை விட்டுப் பிரிந்து சுன்னுகத்திற்கு தாய் வீட்டுக்குப்போன என் மனுஷி வரப்போகிருளே என்று கவலையாக இருக்கிறது' என்ருர்.

'ஸ்கைலாட்பிலும் ஆபத்தானவள என்ரை மனுஷி... என்று அவர் தொடர்ந்தார்... எல்லாரும் வசதியான இருப்பிடங்களைத் தேடிக்கொண்டனர்.

ஸ்கைலாப் விழுவதற்கு இன்னும் 2 மணிநேரந்தான இருந்தது... ஒரு குடும்பத்தினர் ரேடியோ வைத்திருந்தனர்.

'வானத்தில்மீது மயிலாடக் கண்டேன்... மயில் குயில ஆடுதடி' என்ற பழைய பாட்டைப பாடிக்கொண்டிருந்தது... திடீரென கர்...புர் என்றது.

'முக்கிய அறிவித்தல்! யாழ்ப்பாண மாவட்டத்தில் விழும் என அறிவிக்கப்பட்ட ஸ்கைலாப்பின்பகுதி அங்கு விழாது என விஞ்ஞானிகள் சற்றுமுன்பு அறிவித்துள்ளனர்: ஸ்கைலாப்பின் பாதையில் ஏற்பட்ட மாற்றம் காரணமாக வேறு இடம் சென்றுவிட்டது. ஆதலால் யாழ். மாவட்டத்திலுள்ள மக்கள் அஞ்சத் தேவையில்லை- என்றது' வாஞெலி.

## மூவர் பலி!

[திருச்சி]

திருச்சி மாவட்டத்திலுள்ள திருநகரில் ஊசிமருந்து தயாரிக்கும் தொழிற்சாலையில் ஏற்பட்ட விபத்தொன்றில் மூவர் பலியானர்கள். படுகாயமடைந்த இருவரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது.

வயலில் வளம் பெருக வழி செய்யும்

# என்ட்றின் 20 - என்டோசல்பான் 35



பயிர்கள் நாசமடைந்து பரிதவிக்கும் கமக்காரரே!
உங்கள் வருவாயை நாசப்படுத்தும் பூச்சி புழுக்களை விரைவாக ஒழித்துக்கட்ட என்ட்றின் 20, என்டோசல்பான் 35, இரண்டுமே சிறந்த வழிகள்.

சக்தி செறிந்த தரம் சிறந்த என்ட்றின் 20, என்டோசல்பான் 35, இரண்டையும் பாவியுங்கள்.

சுபீட்சமான வாழ்வு பெறப் பாவியுங்கள் - என்ட்றின் 20 - என்டோசல்பான் 35

விநியோகிப்போர்:
ஏ. பவர் அன்ட் கம்பனி லிமிட்டெட்
62, ஜேதவன ரோட், கிரேண்பாஸ், கொழும்பு 14

கொட்டகை நிறைந்த 5-வது வாரம்
REGAL Daily at 2-00, 4-30, 7-00 & 9-30 p. m. only
(Jaffna) Saturday & Sunday at 10-30 a.m.
URSULA ANDRESS
in
Mountain In The Jungle
Color — Scope — Adults
இருவர்கள் வயதுவந்தவர்களுடன் வந்தால் அனுமதிக்கப்படுவர்.

சில தினங்கள் மட்டும்
வின்சர் போன்: 466
தினசரி 4 காட்சிகள்
[யாழ்ப்பாணம்] 10-30 2 00, 6-00, 9-30
பைலட் பிரேம்நாத்
(ஈஸ்ட்மன் கலர்)

வெலிங்டன் தினசரி 10-30, 2-30, 6-30, & 9-45.
[யாழ்ப்பாண]
கே. பி. சுந்தராம்பாள் நடித்த
ஒளவையார்

லிடோ போன்: 7693 தினசரி 4 காட்சிகள்
யாழ். நகர்
பொன்னி

88வது தினம். (கடைசி சில தினங்கள் மட்டும்)
ராஜா தினசரி 4 காட்சிகள்
யாழ். நகர் எம்.ஜி.ஆர் - ஜெயலலிதா நடித்த
ஒளிவிளக்கு
புதிய பிரதி ஈஸ்மன்கலர்

மனோகரா 10-30, 2-30, 6-30, 9-45
[யாழ். நகர்]
விஜயகுமார்-ஜெயசித்ரா-நாகேஷ் தவரின்
தாயில்லா குழந்தை

ஸ்ரீதர் தினசரி 4 காட்சிகள்
யாழ்ப்பாணம் நாகேஷ்-கல்பனு நடித்த
சாது மிரண்டால்
[புத்தம் புதிய பிரதி]

4-வது வாரம்
ராணி (யாழ். நகர்) தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர்., லதா, சந்திரகலா, மஞ்சுளா நடித்த
உலகம் சுற்றும் வாலிபன்
கொட்டகை நிறைந்த காட்சி.

A Grand Release! Daily 5 Shows
SHANTHI JAFFNA Phone: 7642
10-30, 2-30, 4-45, 7-00 & 9-30 P. M.
He didn t want to be a Hero... until the day they pushed him too far.
CHARLES BRONSON
Mr. MAJESTYK-Color
Adults Only - Full of Action Packed Film
Charles Bronson Received the Golden Globe Award in 1972, for the "Worlds Most Popular Actor"
நீங்கள் என்றும் கண்டிராத பரபரப்பையூட்டும் பயங்கரக் கார் ஓட்டங்கள், திகிலூட்டும் துப்பாக்கி வேட்டுகள், மயிர்க்கூச்செறியும் சண்டைக் காட்சிகள் நிறைந்த அற்புத அதிசிறந்த திரை ஓவியம்

# இன்றைய பலன்

[ஆனி மாதம் 28-ம் திகதி]

[வியாழக்கிழமை]

(12-7-1979)

**மேடம்:** எதிலும் அவட்சியம் மனப்பான்மைதோன்றக் கூடும் சகோதரவழியால் சஞ்சலத்துக்கு இடமுண்டு. இன பந்துக்களின் தொல்லைகள் அதிகரிப்பதற்கு இடமுண்டு மௌனமுண்டு.

**இடபம்:** இயந்திரங்களுடன் பழகுபவர்கட்கு இன்று சிறப்பான தினம். கல்வியில் நல்ல அபிவிருத்தி தென்படுகிறது. ஆசிரியர் செல்வாக்கும் பெருக இடமுண்டு.

**மிதுனம்:** நினைத்ததை முடிப்பதில் இன்று வெற்றி காண்பீர்கள் தொழில்துறையில் பதவி உயர்வுக்கும் இடமுண்டு சிலர் வாழ்க்கையில் காதல் விவகாரமும் ஏற்படலாம்.

**கடகம்:** ஆமை வேகத்தில் காரியங்கள் நடைபெறும் பகைவர்களின் சூழ்ச்சிகள் பலமாக இருக்கும் காணித்தொல்லையினால் கடன்படநேரிடலாம் குடும்பத்தில் இடைக்காலப் பிரிவுக்கும் இடமுண்டு.

**சிங்கம்:** இனிமையின் அழைப்பு இன்று உங்களுக்கு கிடைக்கும். இல்லம் பல்கலைக் கழகமாக மாறும் அறிஞர்களின் வருகை உற்சாகப்படுத்தும் களஸ்திரவழியாலும் கண்ணியம் சேரும்.

**கன்னி:** வேண்டிய ஒருவரைப் பகைத்துக்கொள்ள நேரிடலாம் அவசரப்பேச்சினால் ஆபத்துக்கள் விளையும் சிலர் வாழ்க்கையில் பிரிவுத்துயர் வாட்டக்கூடும் சகோதர வழியாலும் சஞ்சலமுண்டு.

**துலாம்:** வசதிகள் பெருகும். வரவிலும் திருப்தி ஏற்படும். செல்வாக்குப்பெருகும். செல்வாக்குப் படைத்தவர்களின் ஆதரவும் கிடைக்கும். ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தவிடயமொன்று உங்களுக்குச் சாதகமானமுடிவு தரும்.

**விருச்சிகம்:** உல்லாசமாகப் பொழுதைப் போக்குவீர்கள் இன்று அதிக சுறுசுறுப்புடன் செயலாற்றுவீர்கள் பிள்ளைகளின் நடவடிக்கைகள் பெருமையைத் தேடித்தரலாம். பொருள் வரவுக்கும் இடமுண்டு.

**தனுசு:** சகோதர பாசம் தலைதூக்கி நிற்கும் பிதாவழிச் சுகம் கிடைக்கும். கைத்தொழில் விருத்திக்கு இடமுண்டு. முதியவர் ஒருவரின் அறிவுரைகள் முன்னேற்றத்தை அளிக்கும்.

**மகரம்:** பல வழிகளிலும் பணம் செலவாகும் நண்பர்கள் சகவாசத்தால் சிக்கல்களில் மாட்டிக்கொள்ள நேரிடும். நடுநிலைமை நன்று.

**கும்பம்:** அதிகாரப் போதையில் தவறுகள் நடக்கும் சகாக்களின் விரோதத்தைச் சம்பாதிக்க நேரிடும். வேண்டுவது பொறுமையே.

**மீனம்:** வீட்டில் சுபகருமங்கள் இடம் பெறும் பிரிந்தவர்கள் மீண்டும் வாழ்க்கையில் இணைவர் கைத்தொழில் புரிபவர்களுக்கு நல்லவருவாய் உண்டு

சோதிடக்கலாநிதி

திருமலை க. வேலுப்பிள்ளை

நாகம்ஸ் (சுன்னாகம்)
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
சிவாஜி, சாவித்திரி
காத்தவராயன்

ஜனத்திரள் நிறைந்த 3-வது வாரம்
Rio Phone: 7607
Daily 10-30,
(Jaffna) 4-45, 7-00 & 9-30 p. m.
THE ARENA
Strictly for adults.
Sex Thrill.



யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள முகாமைத்துவ ஆலோசனை நிறுவனமான அலையிட் மனேஜ்மென்ட் சேர்விஸஸ்'' ஸ்தாபனத்தை வட்டுக்கோட்டைத் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் திரு மு திருநாவுக்கரசு குத்துவிளக்கேற்றி ஆரம்பித்து வைப்பதைப் படத்தில் காணலாம். இதன் நிர்வாக இயக்குனர் சட்டத்தரணி திரு பெ. வ. ஸ்ரீரங்கன் வலதுபுறத்தில் காணப்படுகிறார்.

## "மாதர்களுக்குத் தூய சிந்தனை வேண்டும்"

(சுரவேட்டி)

"தமிழருடைய பண்பாடு அருகிவரும் காலத்தே நாம் மிகவும் கவனமாக இருக்க வேண்டும். மாதர்கள் தூய சிந்தனையுள்ளவர்களாக இருப்பதனால் சிறந்த பிள்ளைகளைப் பெற்றெடுக்கமுடியும்."

இவ்வாறு கரவெட்டி மாதர் சங்கத்தில் நடைபெற்ற கருத்தரங்கில் பருத்தித்துறை ஸ்ரீ சாரதா சேவாச்சிரம பொதுக் காரியதரிசி திரு பிர. இரத்தினசபாபதி பேசுகையில் கூறினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

அன்னை ஸ்ரீ சாரதாதேவி ஒரு சிறிய குக் கிராமத்தில் பிறந்து 67 ஆண்டுகள் உலகில் வாழ்ந்து பெண்களுக்கு ஒரு சிறப்பான வழியைக் காட்டிச் சென்றுள்ளார். இவருடைய வாழ்க்கையில் மூன்று அம்சங்கள் பொலிவுற்று விளங்குகின்றன. தாயாக இல்லற தரிசியாக, ஒரு தனிப்பெரும் துறவியாக ஒரே சமயத்தில் விளங்கியிருக்கின்றார்.

தற்கால பெண்களைப்போல் நவீன கல்வியோ அல்லது ஆரம்பக் கல்விதானும் பெறாதவர் கல்கத்தாவில் சகோதரி நிவேதிதை பாடசாலையைத் திறந்து வைத்து பெண்களுக்கு கல்வி வசதிசெய்வது காலச்சிறந்தது என்பதை பாரதியார் போன்றவர்கள் முன்பே எடுத்துக் கூறியுள்ளார்.

சாதிபேதம் பாராட்டாது, பெற்ற தாயினும் கருணையே வடிவெடுத்தவர், தற்கால பெண்கள் தங்கள் சுய இயல்புகளை எக்காரணத்தைக் கொண்டும் இழக்கக்கூடாது என்று வற்புறுத்திக் கூறியுள்ளார். அச்சம், மடம், நாணம் பயிர்ப்பு போன்ற குணங்கள் இக்காலத்து அருகிவரும் பொழுது தூய அன்னையின் வாழ்வும் உபதேசமும் மாதர்களுக்கு ஒரு கலங்கரை விளக்கமாக அமைகிறது" (க)

## "தனது எதிர்காலத்தை தீர்மானிக்கும் உரிமை இனத்துக்கு உண்டு"

(யாழ்ப்பாணம்)

ஒரு மனிதன் தனது எதிர்காலத்தைத் தீர்மானித்துக் கொள்வதற்கு எவ்வாறு பூரண உரிமை உடையவனாக இருக்கிறானோ அவ்வாறே ஒருதேசிய இனமும் தனது எதிர்காலத்தைத் தீர்மானித்துக் கொள்வதற்கு பூரண உரிமை உடையதாகும். இதைமறுத்து ஒரு இனத்தின்மீது பெரும் இனவாத அதிகாரத்துடன் அரசாங்கம் நடத்து கொள்வது அப்பட்டமான இன அடக்கு முறையாகும்."

மேற்கண்டவாறு குரும்பசிட்டி உதயதாரகை மன்றம் நடத்திவரும் மாதாந்தக் கருத்திரங்கில் உரையாற்றிய இடதுசாரி கம்யூனிஸ்ட் கட்சியின் உடபிரதேசச் செயலாளர் திரு. செந்திவேல் கூறினார். "தமிழ் இனத்தின் விடுதலையும் சர்வதேச ஆதரவும்" என்னும் தலைப்பில் நடைபெற்ற மேற்படி கருத்தரங்கில் செந்திவேல் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

ஒரு மனிதன், தான் நினைத்தபடி நடந்து கொள்ள உரிமை உண்டு என்கூறினால் சமுதாயத்திற்கும தீங்கு விளைவிக்கும நடவடிக்கைகளை எவ்வாறு அனுமதிக்கமுடியாதோ அதேபோல் ஒரு தேசிய இனத்தின் மத்தியில் உள்ளசிலர் அந்த இனத்திற்கும், முழுநாட்டிற்கும் கேடு விளைவிக்கக் கூடிய விதத்தில் கிளப்பும் பிரிவினைக் கோரிக்கையையும் அனுமதிக்க முடியாது ஒரு புறத்தில் அரசாங்கத்தின் இன அடக்கு முறைக் கொள்கைகள் அமுல் படுத்தப் படுகின்றன. மறுபுறத்தில் அதை எதிர்ப்பதற்கு பிரிவினைக் கோரிக்கை முன் வைக்கப்படுகின்றது. இவை இரண்டுக்குமிடையே சாதாரண தமிழ், சிங்கள மக்கள் மிகவும் நிதானமாக இருக்க வேண்டிய அவசியத் தேவை இன்று நாட்டில் ஏற்பட்டிருக்கின்றது

"அமெரிக்க மசாகூசெற்றிலும், பிரித்தானிய லண்ட

[6-ம் பக்கம் பார்க்க]

வெஸ்லி
சாவிப்பாய்
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
கமலஹாசன்-ஸ்ரீவித்யா
ஆசை அறுபது நாள்

## பஸ்ஸிலிருந்து விழுந்த பெண் ஆஸ்பத்திரியில் மரணம்

[யாழ்ப்பாணம்]

இ. போ. ச. பஸ்ஸில் பிரயாணம் செய்த பெண் ஒருவர் பஸ்ஸில் இருந்து விழுந்த பின் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு மரணமானார்.

கடந்த சனிக்கிழமை மாலை யாழ். பஸ் நிலையத்திலிருந்து கொடிகாமம் சென்ற பஸ்ஸில் நுணாவிலுக்குச் செல்வதற்காகப் பஸ்ஸில் ஏறிய திருமதி சிவசோதி சரஸ்வதிதேவி பஸ்ஸில் நெருக்கடி காரணமாக உள்ளே செல்ல முடியாது பஸ்ஸின் இரண்டாவது படியில் நின்று பிரயாணம்செய்ய முற்பட்டாராம். அதே பஸ்ஸின் கீழ்ப்படியில் நின்று பிரயாணம் செய்த ஒருவர் அவ்விடத்தில் இருந்த மின் கம்பத்தில் மோதி நிலத்தில் விழுந்தாராம். அதைத்தொடர்ந்து மரணமான சிவசோதி சரஸ்வதிதேவியும் மற்றவர்களும் ஒருவர் மேல் ஒருவராக நிலத்தில் விழுந்தனராம்.

மீண்டும் சகலரையும் ஏற்றிக்கொண்டு பஸ் புறப்பட்டு கொடிகாமம் சென்றபோது மேற்படிபெண் நுணாவிலில் இறங்கித் தனது வீட்டிற்குச் சென்றாராம்.

வீட்டிற்குச் சென்றதும் சரஸ்வதிதேவிக்கு வயிற்றில் நோவு கண்டதாகவும் உடன் சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு அனுமதிக்கப்பட்டதும் மரணமானதாகவும் கூறப்பட்டது.

சாவகச்சேரி மரணவிசாரணை அதிகாரி திரு. எஸ். கந்தசாமி மரணவிசாரணையை நடத்தினார்.

இறந்தவரின் கணவன் நைஜீரியாவில் என்ஜினியராகக் கடமையாற்றுவதாகவும் அவருடன் அவரது மனைவி சரஸ்வதிதேவியும் நைஜீரியாவில் வசித்து வந்ததாகவும் தாயின் சுகயீனம் காரணமாக நைஜீரியாவில் இருந்து சாவகச்சேரிக்கு வந்ததாகவும் மரணவிசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

பிரேத பரிசோதனையை மேற்கொண்ட டாக்டர் பஸ்ஸில் இருந்து விழுந்தபோது சரஸ்வதிதேவிக்கு மேல் வேறு பிரயாணிகள் விழுந்திருக்கலாமென்றும், அதனால் அவரது ஈரலில் காயமுற்று மரணம் ஏற்பட்டிருக்கலாமென்றும் தெரிவித்தார்.

மரணவிசாரணை அதிகாரி திரு. ரீ. எஸ். கந்தசாமி பொலிசாரும் இ. போ. ச. அதிகாரிகளும் அக்கறை எடுத்து பிரயாணிகளின் நலனை கவனிக்க வேண்டும் என்றார்.

தனியார் வாகனங்களில் கூடுதலான பிரயாணிகள் ஏற்றப்பட்டால் உடன் நடவடிக்கை எடுக்கும் பொலிஸார் 57 பிரயாணிகளை ஏற்ற வேண்டிய பஸ்களில் நூற்றுக்கதிகமான பிரயாணிகளை ஏற்றிச் செல்வதை பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் என்றும் தெரிவித்தார்.

யாழ். உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் சிறகுமார சாட்சிகளை ஆஜர் செய்தார். [கோ]

## லயன்ஸ் கழக கொடித்தினம்

(யாழ்ப்பாணம்)

வலதுகுறைந்தோர் வாழ்வு மலர்வதற்காக, யாழ் லயன்ஸ் கழகம் இன்றும் நாளையும் யாழ் நகர் எங்கும் கொடித்தினம் அனுஷ்டிக்கும்.

கொடித்தினத்தையொட்டி நூற்றுக்கணக்கான தொண்டர்கள், லயன் பிரமுகர்கள், லயன் மாதர்கள் ஆகியோர் யாழ் பஸ் நிலையம், சகல பாடசாலைகள், தொழில் நிலையங்கள் இல்லங்கள் ஆகியவற்றில் நிதிதிரட்டுவர்.

திரட்டப்படும் நிதிமுழுவதும் வலதுகுறைந்தோர் பணிமனை நிறுவுவதற்குப் பயன்படுத்தப்படும். [செ]

## ரதோற்சவம்

திருநெல்வேலி தலங்காவற் பிள்ளையார் கோவில் ரதோற்சவம் இன்று புதன்கிழமை நடைபெறுகின்றது. [கா]

## ரூ. 65,000 பெறுமதியான கடத்தல் பொருட்கள்
### சுங்கப் பகுதியினர் கைப்பற்றினர்

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் கொட்டடியைச் சேர்ந்த இரு வீடுகளை சோதனையிட்ட சுங்கப் பகுதியினர் சுமார் 65,000 ரூபா பெறுமதியான பொருட்களைக் கைப்பற்றினர்.

சுங்க இலாகாவுக்கு கிடைத்த இரகசியத் தகவலைத் தொடர்ந்தே இவர்கள் இவ் வேட்டையில் இறங்கினர்.

இந்தியாவிலிருந்து கடத்தப்பட்டதாகச் சந்தேகிக்கப்படும் இப்பொருட்களில் 200 சேலைகள், 110 வேட்டிகள், 1,100 துண்டு சட்டைத் துண்டுகள், 4,000 யார் சேட் துணிகள், மோட்டார் வாகன உதிரிப் பாகங்கள் அடங்கியிருந்தன.

சந்தேகத்தின்பேரில் இருவரைச் சுங்கப்பகுதியினர் கைது செய்தனர்.

சுங்க இலாகா அதிகாரிகளான திருவாளர்கள் ஆர் சோமசுந்தரம், எம் அசோகன், இ ரி ஈ ஜெயரத்தினம், ஆர் இரத்தினராசா, வி ஜெயரத்தினம், கே கி டயஸ், எச் ஏ பியசேன, கே ரி நிகால், ரவீந்திரநாத் ஆகியோர் இத்திடீர் வேட்டையை நடத்தினர்.

விசாரணை நடத்திய உதவி சுங்கக் கலெக்டர் திரு. சேனரத்ன, சந்தேகநபர்களுக்குத் தலா 1,000 ரூபா அபராதம் விதித்தார்.

பொருட்களுக்கு உரியவர் தலை மறைவாகியுள்ளாரென சுங்கப் பகுதியினர் தெரிவித்தனர். [கோ]

## சன்சோனி....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தமிழர். பொறுமையோடு இருந்தனர் எந்த சந்தர்ப்பத்திலும் வன்முறையில் இறங்கவில்லை. பலாத்காரம் மூலம் அரசை மாற்றவோ கவிழ்க்கவோ, 1959, 1962, 1966 1977ம் ஆண்டுகளில் எடுக்கப்பட்ட ஒவ்வொரு முயற்சியின் போதும், அதுசிங்களவரை பொறுத்ததாக இருந்தது வடக்கு கிழக்கில் வாழும் தமிழ் மக்கள் இம்முயற்சியில் சம்பந்தப்படவில்லை.

சுதந்திரம் கிடைத்த நாள் முதல் சட்டரீதியாகவும், நிர்வாக ரீதியாகவும், தமிழர்மீது பாகுபாடுகாட்டப்படுவது அதிகரித்துவந்தது. இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தபோதெல்லாம், தமிழர்மீது வன்முறை பாவிக்கப்பட்டுவந்துள்ளது.

பாகுபாட்டை எதிர்நோக்க நேர்ந்ததால் தமிழர் 1956ம் ஆண்டு சமஷ்டி தீர்வுக்கு ஆதரவளித்தனர். இருவருடத்திற்குள் 1958ல் வகுப்பு கலவரம் வெடித்தது. 1977ம் ஆண்டு பிரிவினை கோரிக்கையை முன்வைத்த அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியான தமிழர் விடுதலைக் கூட்டணியை தமிழர் ஆதரித்தனர். ஒருமாதத்திற்குள் நடந்த இனக்கலவரத்தில், தமிழர் கொல்லப்பட்டனர், தமிழ்பெண்கள் கற்பழிக்கப்பட்டனர், இந்துக் கோயில்கள் உடைத்து நொருக்கப்பட்டது

1958, 77 பெரிய கலவரங்களுக்கிடைப்பட்ட காலங்களிலும், தமிழர்கள், துன்புறுத்தலுக்கும், அவமானப்படுத்தப்படுதலுக்கும் தொடர்ந்து உட்படுத்தப் பட்டுவருவது ஒரு வழமையான நடைமுறையாகி இருந்துவந்துள்ளது.

பிரச்னைகளுக்குத் தீர்வு காண செல்வாக்கு பெற்ற பிரதமர்களால் செய்யப்பட்ட ஒப்பந்த முயற்சிகள் தோல்வியுற்றன. ஏனெனில் இன்றும் அதிக தீவிரம் வாய்ந்த பௌத்த இனவாத குழுக்களை 1958ல் பிரதமர் பண்டாரநாயக்காவும், 1965ல் டட்லி சேனநாயக்காவும், சமாளிக்க முடியாமல் போய்விட்டது இந்தப் பிரச்னைக்கெல்லாம் இவைதான் அடிப்படையான தால், தமிழ்ஈழம் விரும்பப் படாததுவோ, ஏற்கப்படாததுவோ, சரித்திரரீதிக்குட்பட்டதோ அல்ல,

அநீதி நிலவுமிடத்திலும், உண்மையான குறைபாடுகள் கவனிக்கப்படாமல் இருந்து வரும் இடங்களிலும், பயங்கரவாதம் வளரும் ஜனநாயக முறையில் பிரச்னைகளுக்குத் தீர்வுகாண முடியாமென்ற சூழ்நிலை சிறிதாவது இருக்குமானால் வன்முறை தலை தூக்கும். பயங்கரவாதத்தை ஒழிப்பதற்கு அடக்குமுறைவழியல்ல. அநீதியும், குறைபாடுகளும் அகற்றப்படுவதே வழியாகும்.

வன்முறை தொடர்பாக ஆணைக்குழுவுக்கு அக்கறை உண்டென்பதை ஏற்றுக்கொள்கிறோம். இந்த ஆணையாளர் மீது எமக்குள்ள நம்பிக்கையை மீண்டும் வலியுறுத்துகிறோம். சகல விதத்திலும் விசாரணையில் உதவுவோம். [க]

## யாழ். பஸ்நிலைய ஊழியர் கஷ்டம்

[யாழ்ப்பாணம்]

யாழ். பஸ்நிலையத்தில் நடைபெற்றுவந்த தேனீர் சிற்றுண்டிச்சாலையை நேற்றுமுன்தினம் முதற்கொண்டு அதிகாரிகள் மூடிவிட்டதாகத்தெரிகிறது.

இந்நிலையத்தில் ஊழியர்களுக்கும், அதிகாரிகளுக்கும் ஓய்வுஎடுக்கும் விடுதி வசதியோ இரவில் தங்கும் வசதியோ இல்லை என்று ஏற்கனவே குறை கூறப்பட்டுவந்துள்ளது. பஸ் ஊழியர்கள் பாவிக்கக்கூடியதான மலசலகூடவசதிகூட இல்லையென்று கூறப்படுகின்றது.

அருகில் உள்ள பொதுமலசலகூடம் பிரயாணிகள்கூட பாவிக்க முடியாதநிலையிலேயே இருந்துவருவது தெரிந்த விஷயமே.

## யோகேஸுக்கு வரவேற்பு

[யாழ்ப்பாணம்]

இந்தோனேஷியா, மலேசியா, சிங்கப்பூர், ஆகிய நாடுகளில் நல்லெண்ண விஜயத்தை முடித்துக்கொண்டு நேற்று யாழ் நகர் திரும்பிய யாழ்ப்பாணம் எம் பி திரு. வெ யோகேஸ்வரனுக்கு யாழ் புகையிரதநிலையத்தில் சிறப்பான வரவேற்பளிக்கப்பட்டது.

யாழ்ப்பாண எம் பியை முதலில் யாழ் மாநகரசபை உதவி முதல்வர் திரு. ஏ சேவியர், மலர்மாலை அணிவித்து வரவேற்றார். அவரைத் தொடர்ந்து சில மாநகர சபை உறுப்பினர்கள், தொண்டர்கள் பொதுமக்கள் ஆகியோர் மாலை அணிவித்தனர்.

## தனது எதிர்...

(5ம் பக்கத் தொடர்ச்சி)

ளிலும் பிரிவினைக்கு ஆதரவு தேடுவதால் தமிழ் இனம் தனது உண்மையான விடுதலையைப் பெற்றுக்கொள்ள முடியாது என்பதையும் தமிழ்த் தலைவர்கள உணர்ந்துகொள்வது அவசியமாகும். தமிழ் இனத்தின் விடுதலை எதிர்காலத்தில் தமிழ் சிங்கள மக்களின் புரட்சிகரப் போராட்டங்களிலேயே தங்கியுள்ளது.' என்றும் கூறினார்.

## தர்மபுரத்தில் 3 துப்பாக்கிகள் மீட்பு

[கிளிநொச்சி]

கிளிநொச்சி தர்மபுரத்தில் அனுமதிப்பத்திரமின்றி துப்பாக்கிகளை வைத்திருந்த மூவர் கிளிநொச்சி பொலிசாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

மூன்று பேரும் மூன்று துப்பாக்கிகளை வைத்திருந்தனராம்

பொலிசாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலை அடுத்தே இத்துப்பாக்கிகள் மீட்கப்பட்டன. [இ]

### சாவகச்சேரியில்

கொடிகாமத்தில் ஒரு வீட்டைச் சோதனையிட்ட பொலிஸார் அனுமதிப்பத்திரமில்லாத துப்பாக்கிஒன்றை கைப்பற்றினர்.

வீட்டு உரிமையாளரையும் பொலிஸார் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்தனர்.

பொலிஸாருக்கு கிடைத்த ரகசியத்தகவலைத்தொடர்ந்தே இத்தேடுதல் வேட்டை நடைபெற்றது.

சந்தேகநபர் பிணையில்செல்ல அனுமதிக்கப்பட்டார். [ச]

### முன்னாள் ராணுவ வீரர்

அனுமதிப்பத்திரமின்றி றிவால்வர் ஒன்றை வைத்திருந்த முன்னாள் இராணுவ வீரர் ஒருவர் யாழ்ப்பாணம் பொலிசாரினால் கைதுசெய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

ஊர்காவற்றுறை, பருத்தியடைப்பைச் சேர்ந்த கைலாசபிள்ளை பாலச்சந்திரன் என்ற முன்னாள் இராணுவ வீரரே இவ்வாறு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டவராவார்.

இவரிடமிருந்து கைப்பற்றப்பட்ட றிவால்வர் 1971ம் ஆண்டு நடைபெற்ற கிளர்ச்சியின்போது கேகாலையில் வைத்து கிளர்ச்சிக்காரரிடமிருந்து கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (கு)

## அலங்காரஉற்சவம்

(யாழ்ப்பாணம்)

வெள்ளாந்தெரு ஸ்ரீ ஞானவைரவசுவாமி கோவில் அலங்கார உற்சவம் இன்று நடைபெறும்.

பகல் ஆயிரத்தெட்டுச் சங்காபிஷேகமும் இரவு பூந்தண்டிகையில் சுவாமி வீதிவலம் வருதலும் இடம்பெறும். அடியார்களுக்கு பகல் அன்னதானமும் வழங்கப்படும். [கோ]

## ஆகஸ்ட் 15-ல் தீர்ப்பு

[யாழ்ப்பாணம்]

அகில இலங்கை தமிழ்க்காங்கிரஸின் மகாநாட்டுத்தடை மனு மீதான தீர்ப்பு அடுத்த மாதம் பதினைந்தாம் திகதி என்று யாழ். மாவட்ட நீதிபதி திரு. ஆசீர்வாதத்தினால் வழங்கப்படும்.

## மணவாழக் கோலவிழா

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணை வில்வலிங்க மகாகணபதி கோவில் [பன்றிக்கோட்டுப் பிள்ளையார்] மணவாளக் கோலத்திருவிழா இன்றுநடாத்தப்படுகிறது

இவ்விழாவில் திரு. ச. விநாயகமூர்த்தி "திருத்தொண்டர் நெறி" என்னும் பொருள்பற்றி உரையாற்றுவார். [கா]

## தென் இந்து...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

கப்பட்டு விட்டது,

ஸ்கைலாப்பின் சிதறிய பகுதிகள் விழுந்த இடத்தை சரியாகக் கண்டுபிடித்து அவைகளை மீட்பதில் விஞ்ஞானிகள் இப்பொழுது ஈடுபட்டுள்ளனர்,

ஸ்கைலாம் சிதைவுகள் பசுபிக் சமுத்திரப் பிரதேசத்திலேயே விழக்கூடும் என்று முதலில் எதிர்பார்க்கப்பட்டது, ஆனால் அமெரிக்க விஞ்ஞானிகள் பெரும்பாடுபட்டு ஆய்வு கூடத்தை அசைத்து காற்று மண்டலத்துக்குள் நுழையும் நேரத்தை 30 நிமிடங்களுக்கு தாமதிக்கச் செய்ததின் மூலம் அது நிலப்பிரதேசத்தில் விழாதபடி செய்தனர், இதன் காரணமாக ஆய்வு கூடம் தென் இந்து சமுத்திரத்தில் விழும்படி செய்தனர்,

இதன்மூலம் உலக மக்கள் கொண்டிருந்த பெரும்பீதி சுலபமாகத் தீர்ந்து விட்டது,


வை. எம். சீ. ஏ.

இளைஞர் பயிற்சி நிலையம்

பரந்தன்

ஆவணி 1979/80-ம் ஆண்டுபயிற்சிக்கான விண்ணப்பம்

விவசாயம், கால்நடை வளர்ப்பு, பழச்செய்கை, பண்ணை நிர்வாகம் என்பனவற்றில் ஆண்களுக்கென நடாத்தப்படும் ஒருவருட வாசஸ்தல பயிற்சித்திட்டத்திற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பதாரிகள் க. பொ. த [சாதாரணம்] அல்லது தெ. க. பொ. த [சாதாரணம்] வரைக்கும் படித்திருத்தல் வேண்டும்.

இலவசமாகப் பயிற்சி அளிப்பதுடன், பயிற்சிக்காலத்தில் நாள் ஒன்றுக்கு உணவிற்கான உபகாரச் சம்பளமாக ரூபா 4/- கொடுக்கப்படும்.

முழு விபரங்களுடன் விண்ணப்பத்தை கீழ்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

விண்ணப்ப முடிவு திகதி 20-7-1979.

இயக்குநர்

வை. எம். சீ. ஏ. இளைஞர் பயிற்சி நிலையம்

பரந்தன். 3019


இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் கே. கே. எஸ். வீதி 650ம் இலக்க அச்சகத்தில் 1979-ம் ஆண்டு ஜூலை மாதம் 12ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a Newspaper at the General Post Office Sri Lanka under No QB 8945/78 The Eelanaadu P B No: 49; Telegrams: Eelanaadu Jaffna 289.